ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஸிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ॥ ஆர்த்தி ப்ரபந்தம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஸிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Smt. Kalyani Krishnamachari of Chicago, USA, for proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆர்த்தி ப்ரபந்தம் ॥

## கோயில் கந்தாடையண்ணன் அருளிச்செய்த தனியன்

தேன்பயிலும்தாரான் எதிராசன் சேவடிமேல்⋆
    தான் பரமபத்தி தலையெடுத்து⋆ - மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள்செய்தான்⋆
    மணவாளமாமுனிவன் வந்து

வம்பவிழ்தார்வண்மை மணவாளமாமுனிகள்⋆
    அம்புவியிற் கால் பொருந்தாவார்த்தியினால்⋆ - உம்பர்தொழும்
விண்ணுலகிற் செல்ல விரைந்தெதிராசன் பதங்கள்⋆
    நண்ணியுரைத்தார் நமக்கு

## நூல் - நேரிசை வெண்பா

வாழியெதிராசன் வாழியெதிராசன்⋆
    வாழியெதிராசனென வாழ்த்துவார்⋆ - வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார்⋆ தாளிணையில்
    தாழ்த்துவார் விண்ணோர் தலை (1)

இராமானுசாயநம வென்று சிந்தித்து⋆
    இராமானுசரோடு இறைப்பொழ்து⋆ - இராமாறு
சிந்திப்பார் தாளிணையில் சேர்ந்திருப்பார்⋆ தாளிணையை
    வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு (2)

தந்தைநற்றாய் தாரம் தனயர்பெருஞ்செல்வம்⋆
    என்தனக்கு நீயே எதிராசா⋆ - இந்தநிலைக்கு
ஏலாத இவ்வுடலை இன்றே அறுத்தருள⋆
    பாராததென்னோபகர் (3)

இந்தவுடற்சிறைவிட்டு எப்பொழுது யானேகி⋆
    அந்தமில்பேரின்பத்துளாகுவேன்⋆ - அந்தோ!

இரங்காய் எதிராசா என்னை இனியுய்க்கை⋆
பரங்காண் உனக்கு உணர்ந்து பார் (4)

தன்புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால்⋆
இன்புறுமோ தந்தை எதிராசா!⋆ - உன்புதல்வன்
அன்றோ உரையாய் யான் ஆதலால்⋆ உன்போகம்
நன்றோ எனை ஒழிந்த நாள் (5)

வேம்பு முற்றக் கைப்பு மிகுவதுபோல்⋆ வெவ்வினையேன்
தீம்புமுற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால்⋆ - ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா!⋆ இவ்வுடலைத்
தீர்க்கவேயான வழிசெய் (6)

அன்னை குடிநீர்ருந்தி⋆ முலையுண் குழவி
தன்னுடைய நோயைத் தவிராளோ⋆ - என்னே
எனக்கா எதிராசா! எல்லாம் நீசெய்தால்⋆
உனக்கது தாழ்வோ உரை (7)

தன் குழவி வான் கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள்⋆
என்பதன்றோ அன்னை பழி யேற்கின்றாள்⋆ - நன்குணரில்⋆
என்னாலே யென்னாகு மேலும் எதிராசா!⋆
உன்னாலே யாமுறவையோர் (8)

கூபத்தில்வீழும் குழவியுடன் குதித்து⋆ அவ்
வாபத்தை நீக்கும் அந்த அன்னை போல்⋆- பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன்⋆
தான் பிறக்கு மென்னை உய்ப்பதா (9)

பூமகள் கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த்⋆
தாம் மகிழும் செல்வச் சடகொபர்⋆- தேமலர்த்தாட்கு
உய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமானுசனை⋆
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ் (10)

உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா⋆
மன்னு புகழ்சேர் வடுகநம்பி⋆- தன்னிலையை

என்தனக்கு நீ தந்து எதிராசா!⋆ எந்நாளும்
உன் தனக்கே ஆட்கொள் உகந்து (11)

தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை⋆
மாசில் திருமலையாழ்வார்⋆ என்னை நேசத்தால்
எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா!⋆
அப்படியே நீ செய்தருள் (12)

எதிராசன் வாழி எதிராசன் வாழி⋆
எதிராசன் வாழி என்றேத்திச்⋆ - சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர்⋆
ஆழ்வார்கள் தங்களருள் (13)

அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ⋆
அதிகாரம் இல்லாதார்க்கன்றோ - எதிராசா!
நீயிரங்கவேண்டுவது⋆ நீயும் அதிகாரிகளுக்
கேயிரங்கில்⋆ என்செய்வோம் யாம் (14)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்⋆
என்பதுவே நாவுரைக்கும் இத்தாலென்⋆- அன்பவர்பால்
இப்போதளவும் யானொன்றும் காண்கின்றிலேன்⋆
எப்போது உண்டாவதினி (15)

ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததேசெய்வனாதலால்⋆-மோகாந்தன்
என்று நினைத்து என்னை இகழேல் எதிராசா!⋆
என்று உன்னடி சேர்வன் யான் (16)

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு⋆ நன்மையிலொன்
றில்லா எனக்கும் எதிராசா!⋆ - நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவனென்று நீ⋆
தண்ணென்றிருக்கிறதென் தான் (17)

என்று விடுவது எனக்கு எந்தாய் எதிராசா!⋆
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய்⋆ - குன்றாமல்

இப்படியே இந்தவுயிர்க் கென்றும் இருளே விளைக்கும்⋆
இப்பவமாம் நீண்ட இரவு (18)

அல்லும் பகலும் யானாக்கை வழியுழன்று⋆
செல்லுமது உன் தேசுக்குத் தீங்கன்றோ⋆ - நல்லார்கள்
தந்தனயர் நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ⋆
எந்தை எதிராசா! இசை (19)

## எண்சீராசிரிய விருத்தம்

போம் வழியைத் தருமென்னும் இன்பமெல்லாம்
புசித்து வழி போய் அமுத விரசையாற்றில்⋆
நாம் மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணி நலந் திகழ் மேனி தன்னைப் பெற்றுத்⋆
தாம் அமரர்வந்தெதிர் கொண்டலங்கரித்துச்
சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்ற⋆
மாமலராள் கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வு⋆ நமக்கு எதிராசனருளும் வாழ்வே (20)

## கட்டளைக்கலித்துறை

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்⋆
தருமதிகொண்டவர் தம்மை உத்தாரகராக எண்ணி
இருமனமே⋆ அவர்க்காய் எதிராசர் எம்மைக் கடுக
பரமபதந்தன்னில் ஏற்றுவர்⋆ என்ன பயம் நமக்கே (21)

தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்⋆
ஏதத்தை மாற்றும் எதிராசர் தம் அபிமானம் என்னும்⋆
போதத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக் கடந்து⋆
கோதற்ற மாதவன் பாதக் கரையைக் குறுகுவனே (22)

எண்சீராசிரிய விருத்தம்

அடியார்கள் குழாங்களழ கோலக்கம் இருக்க
ஆநந்தமயமான மாமணி மண்டபத்துப்⋆
படியாதுமில் படுக்கையாயிருக்கு மனந்தன்
பணாமணிகள் தம்மின் ஒளி மண்டலத்தின் இடையில்⋆
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளுமாய் மகளும் இடவருகும் இருக்க⋆
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நான் அனுபவிக்கும் வகை நல்கென் எதிராசா! (23)

இந்த உடல்விட்டிரவி மண்தலத்தூடேகி
இவ்வண்டங்கழித் திடையில் ஆவரணமேழ் போய்⋆
அந்தமில் பாழ்கடந்தழகார் விரசை தனிற்குளித்தங்-
கமானவனால் ஒளி கொண்ட சோதியும் பெற்று⋆ அமரர்
வந்தெதிர் கொண்டலங்கரித்து வாழ்த்தி வழி நடத்த
வைகுந்தம் புக்கு மணி மண்டபத்துச் சென்று⋆
நம் திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாள் எனக்குக் குருகும் வகை நல்கென்ன் எதிராசா! (24)

என்று நிரேதுகமாக என்னை அபிமானித்து
யானும் அறிந்துனக்கேயாய் இருக்கும் வகை செய்தாய்⋆
அன்றுமுதல் இன்றளவும் அநவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வ தநுதவிப்ப தினிச்செய்யேன்⋆
என்றுன்னை வந்திரப்பதாம் என் கொடுமை கண்டும்
இகழாதே இரவு பகல் அடிமை கொண்டு போந்தாய்⋆
இன்று திருநாடும் எனக்கருள எண்ணுகின்றாய்⋆
இனிக் கடுகச் செய்தருள வேண்டும் எதிராசா! (25)

தென்னரங்கர் தமக்காமோ தேவியர்கட்காமோ
சேனையர் கோன் முதலான சூரியர்கட்காமோ⋆
மன்னிய சீர்மாறன் அருள்மாரி தனக்காமோ
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ⋆
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்

எதிராசா! உனக்கன்றி யானொருவர்க் காகேன்⋆
உன்னருளால் எனக்குருசி தன்னையும் முண்டாக்கி
ஒளிவிசும்பில் அடியேனை ஒருப்படுத்து விரைந்தே (26)

இவ்வுலகில் இனியொன்றும் எண்ணாதே நெஞ்சே
இரவு பகல் எதிராசர் எமக்கினிமேல் அருளும்⋆
அவ்வுலகை அலர்மகள் கோன் அங்கிருக்கும் இருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களநுபவத்தை⋆
இவ்வுயிருமதுக் கிட்டுப் பிறந்திழந்து கிடந்த
தென்னுமத்தை என்றுமதுக் கிடைச் சுவராய்க் கிடக்கும்⋆
வெவ்வினையால் வந்தவுடல் விடும்பொழுதை விட்டால்
விலையும் இன் பந்தன்னை முற்றும் விடாமல் இருந்தெண்ணே (27)

பண்டு பலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மைக்⋆
கண்டதெல்லாம் எழுதி அவை கற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன்⋆
புண்டரீகை கேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போக நினைவொன்றும் இன்றிப் பொருந்தி இங்கே இருந்தேன்⋆
எண்டிசையும் ஏத்தும் எதிராசன் அருளாலே
எழில் விசும்பையன்றி இப்போதென் மனம் எண்ணாதே (28)

## பதினான்கு சீராசிரிய விருத்தம்

சாருவாக மதம் நீறு செய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே⋆
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட⋆
மாறுசெய்திடுகணாத வாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்துமேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகைவாதுசெய்த எதிராசனார்⋆
கூறுமாகுரு மதத்தொடோங்கிய குமாரிலன்மதம் அவற்றின் மேல்
கொடிய தர்க்கசரம்விட்டபின் குறுகியமாயவாதியரை வென்றிட⋆
மீறிவாதில்வரு பாற்கரன்மத விலக்கடிக் கொடி எறிந்து போய்
மிக்கயாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே (29)

### எண்சீராசிரிய விருத்தம்

*சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி*
*திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி⋆*
*ஏராரும் செய்யவடிவு எப்பொழுதும் வாழி*
*இலங்கிய முந்நூல் வாழி இணைத் தோள்கள் வாழி⋆*
*சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி*
*தூமுறுவல் வாழி துணைமலர்க் கண்கள் வாழி⋆*
*ஈராறு திருநாமமணிந்த எழில் வாழி*
*இனி திருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே* (30)

*அறுசமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே*
*அடர்ந்து வரும் குதிருட்டிகளை அறத்துறந்தான் வாழியே⋆*
*செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே*
*தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான் வாழியே⋆*
*மறை அதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தான் வாழியே*
*மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே⋆*
*அறம்மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே*
*அழகாரும் எதிராசர் அடியணைகள் வாழியே* (31)

### பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

*சங்கர பாற்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்*
*சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடு நாள்⋆*
*வேங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத் தளர் நாள்*
*மேதினி நஞ்சுமை ஆறும் எனத் துயர் விட்டு விளங்கிய நாள்⋆*
*மங்கயராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்*
*மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடு நாள்⋆*
*செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்*
*சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே* (32)

### எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இன்னம் எத்தனை காலம் இந்த உடம்புடன் யான் இருப்பன்
    இன்ன பொழுது உடம்பு விடும் இன்னபடி அதுதான்⋆
இன்னவிடத்தே அதுவும் என்னும் இவை எல்லாம்
    எதிராசா! நீ அறிதி யான் இவை ஒன்றறியேன்⋆
என்னை இனி இவ்வுடம்பை விடுவித்து உன் அருளால்
    ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்⋆
பின்னை விரையாமல் மறந்திருக்கிறதென் பேசாய்
    பேதைமை தீர்த்து என்னை அடிமை கோண்ட பெருமானே! (33)

முன்னை வினை பின்னை வினை பிராரத்தம் என்னும்
    மூன்று வகையான வினைத் தொகை அனைத்தும்⋆ யானே
என்னை அடைந்தோர் தமக்குக் கழிப்பன் எனும் அரங்கர்
    எதிராசா! நீ இட்ட வழக்கன்றோ சொல்லாய்⋆
உன்னை அல்லதறியாத யான் இந்த உடம்போடு
    உழன்று வினைப் பயன் புசிக்க வேண்டுவதொன்றுண்டோ⋆
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி
    ஏராரும் வைகுந்தத்தேற்றி விடாய் நீயே (34)

அருளாலே அடியேனை அபிமானித்தருளி
    அனவரதம் அடிமை கொள்ள நினைத்து நீ இருக்க⋆
மருளாலே புலன் போக வாஞ்சை செய்யும் என்தன்
    வல்வினையை மாற்றி உன் பால் மனம் வைக்கப் பண்ணாய்⋆
தெருளாரும் கூரத்தாழ்வானும் அவர் செல்வத்
    திருமகனார் தாமும் அருளிச் செய்த⋆ தீமைத்
திரளான அத்தனையும் சேர உள்ள என்னைத்
    திருத்தி உய்யக் கொள்ளும் வகை தேரும் எதிராசா! (35)

### நேரிசை வெண்பா

வாசனையில் ஊற்றமோ மாளாத வல்வினையோ⋆
    ஏதென்றறியேன் எதிராசா!⋆ - தீதாகும்

ஐம்புலனில் ஆசை அடியேன் மனம் தன்னை⋆
வன்புடனே தான் அடரும் வந்து (36)

இன்றளவும் இல்லா அதிகாரம்⋆ மேலும் எனக்கு
என்றுளதாம் சொல்லாய் எதிராசா!⋆ - குன்றா
வினைத் தொடரை வெட்டி விட்டு⋆ மேலை வைகுந்தத்து
எனைக் கடுக ஏற்றாததென் (37)

அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாம் அறியார்⋆
என் சொல் எனக்கோ எதிராசா⋆ - நெஞ்சம்
உன தாள் ஒழிந்தவற்றையே உகக்க⋆ இன்றும்
அநுதாபம் அற்றிருக்கையால் (38)

வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று⋆
தாம் புகடாதே புசிக்கும் தன்மை போல்⋆ - தீம்பன் இவன்
என்று நினைத்து என்னை இகழார் எதிராசர்⋆
அன்றறிந்தங்கீகரிக்கையால் (39)

அவத்தே பொழுதை அடியேன் கழித்துப்⋆
பவத்தே இருக்குமது பண்போ - திவத்தே யான்⋆
சேரும் வகை அருளாய் சீரார் எதிராசா!⋆
போரும் இனி இவ்வுடம்பைப் போக்கு (40)

எனைப் போல் பிழை செய்வார் இவ்வுலகில் உண்டோ⋆
உனைப் போல் பொறுக்க வல்லாரும் உண்டோ⋆ - அனைத்துலகும்
வாழப் பிறந்த எதிராசா மாமுனிவா!⋆
ஏழைக்கிரங்காய் இனி (41)

ஐம்புலன்கள் மேலிட்டடரும் பொழுது அடியேன்⋆
உன் பதங்கள் தம்மை நினைந்தோலமிட்டால்⋆ - பின்பவை தாம்
என்னை அடராமல் இரங்காய் எதிராசா!⋆
உன்னை அல்லால் எனக்குண்டோ (42)

இந்த உலகில் பொருந்தாமை ஏதும் இல்லை⋆
அந்த உலகில் போக ஆசை இல்லை⋆ - இந்த நமக்கு

எப்படியோ தான் தருவர் எந்தை எதிராசா!⋆
ஒப்பில் திருநாடுகந்து (43)

மாகாந்த நாரணனார் வைகும் வகை அறிந்தோர்க்கு⋆
ஏகாந்தம் இல்லை இருள் இல்லை⋆ - மோகாந்தர்
இவ்விடம் ஏகாந்தம் இருள் என்று பயம் அற்றிருந்து⋆
செய்வார்கள் தாம் பாவத் திறம் (44)

நாராயணன் திருமால் நாரம் நாம் என்னும் முறை⋆
ஆராயில் நெஞ்சே! அநாதி அன்றோ⋆ - சீராரும்
ஆசாரியனாலே அன்றோ நாம் உய்ந்ததென்று⋆
கூசாமல் எப்பொழுதும் கூறு (45)

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோம் தம்மைக்⋆
குருவாகி வந்துய்யக் கொண்டு⋆ - பொருவில்
மதி தான் அளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே!⋆
எதிராசர்க்காளானோம் யாம் (46)

கட்டளைக் கலித்துறை

இராமானுசாய நம என்று இரவும் பகலும் சிந்தித்து⋆
இராமானுசர்கள் இருப்பிடம் தன்னில் இறைப் பொழுதும்⋆
இராமானுசர் அவர்க்கெல்லா அடிமையும் செய்ய எண்ணி⋆
இராமானுசர் தம்மை மானுசரா என் கொல் எண்ணுவதே! (47)

எண்ணாது என் நெஞ்சம் இசையாதென் நா இறைஞ்சாது சென்னி⋆
கண்ணானவை ஒன்றும் காணலுறா⋆ கலியார் நலிய
ஒண்ணாத வண்ணம் உலகளித்தோன் எதிராசன் அடி
நண்ணாதவரை⋆ அரங்கேசர் செய்த நலம் நமக்கே (48)

நந்தா நரகத்தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்!⋆
எந்தாதை ஆன எதிராசனை நண்ணும்⋆ என்றும் அவன்
அந்தாதி தன்னை அனுசந்தியும் அவன் தொண்டருடன்⋆
சிந்தா குலம் கெடச் சேர்ந்திரும் முத்தி பின் சித்திக்குமே (49)

அவத்தெ அருமந்த காலத்தைப் போக்கி⋆ அறிவின்மையால் இப்-
பவத்தே உழல்கின்ற பாவியர்காள்⋆ பல காலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கும் எய்த ஒண்ணாத⋆ அந்தத்
திவத்தே உமை வைக்கும் சிந்தியும் நீர் எதிராசன் என்றே (50)

என்றுளன் ஈசனும் உயிரும் அன்றே உண்டிக் காலம் எல்லாம்⋆
இன்றளவாகப் பழுதே கழிந்திருவினையால்⋆
என்றிழவின்றியிருக்கும் என் நெஞ்சம் இருவு பகல்
நின்று தபிக்கும்⋆ எதிராசா! நீ அருள் செய்த பின்னே (51)

கனக கிரி மேல் கரிய முகில் போல்⋆
வினதை சிறுவன் மேற்கொண்டு⋆ - தனு விடும் போது
ஏரார் அரங்கர் எதிராசர்க்காக⋆ என் பால்
வாரா முன் நிற்பர் மகிழ்ந்து (52)

எண்சீராசிரிய விருத்தம்

இதத்தாலே தென்னரங்கர் செய்கின்றதென்றறிந்தே
இருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால்⋆
பதைத்தாலோ என்னும் இந்தப் பாவ உடம்புடனே
பல நோவும் அனுபவித்திப்பவத்திருக்கப் போமோ⋆
மதத்தாலே வல்வினையின் வழி உழன்று திரிந்து
வல்வினையேன் தன்னை உனக்காளாக்கிக் கொண்ட⋆
இதத்தாயும் தந்தையுமாம் எதிராசா! என்னை
இனிக் கடுக இப்பவத்தினின்றும் எடுத்தருளே (53)

கட்டளைக்கலிப்பா

இன்னம் எத்தனை நாள் இவ்வுடம்புடன்
இருந்து நோவு படக் கடவேனையோ!⋆
என்னை இதினின்றும் விடுவித்து நீர்
என்று தான் திருநாட்டினுளே ஏற்றுவீர்⋆
அன்னையும் அத்தனும் அல்லாத சுற்றமும்

ஆகி என்னை அளித்தருள் நாதனே⋆
என் இதத்தை இராப் பகல் இன்றியே
ஏக்மெண்ணும் எதிராச வள்ளலே! (54)

தென்னரங்கர் சீர் அருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்⋆
மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்⋆
முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்⋆
பின்னை ஒன்று தனில் நெஞ்சு பேராமல் பெற்றோம்
பிறர் மினுக்கம் பொறாமை இல்லாப் பெருமையும் பெற்றோமே (55)

நேரிசை வெண்பா

உன்தன் அபிமானமே உத்தாரகம் என்று⋆
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ⋆ - அந்தோ!
எதிராசா! நோய்களால் என்னை நலக்காமல்⋆
சதிராக நின் திருத்தாள் தா (56)

தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை⋆
வாசமலர்த் தாள் அடைந்த வத்துவென்னும்⋆ - நேசத்தால்
என் பிழைகள் காணா எதிராசா! அடியேன்
புன் பகர்வைக் கேளும் பொறுத்து (57)

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்⋆
உன்தன் உறவை உணர்ந்த பின்⋆ - இந்த உயிர்க்-
கெல்லா உறவும் நீ என்றே எதிராசா!⋆
நில்லாததுண்டோ என் நெஞ்சு (58)

எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல்⋆
வந்து முகம் காட்டி வழி நடத்த⋆ - சிந்தை செய்திப்-
பொல்லா உடம்பு தனைப் போக்குவது என்னாள் கொலோ⋆
சொல்லாய் எதிராசா! சூழ்ந்து (59)

இந்த அரங்கத்தினிதிரு நீ என்றரங்கர்⋆
எந்தை எதிராசர்க்கீந்தவரம்⋆ - சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதை சொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறை தான் (60)

॥ ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம் ॥